# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 03.07.2026**

**சி.சி.எண். 325/2024**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.5 (கதிர்காமு) மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் மறுவிசாரணை**

எதிரியை தேடி வந்தநிலையில் 05.10.2017 ம் தேதி 13.00 மணிக்கு திருமலாபுரம் பஸ்ஸ்டாப் வடக்குபுறம் மெயின்ரோட்டில் ஆய்வாளர் ராணி மற்றும் நானும் சேர்ந்து வாகனத்தணிக்கை செய்துகொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்காக TN 79 D 2041 என்ற பதிவெண் கொண்ட Hero Honda வாகனத்தில் வந்த 1ம் எதிரியை நாங்கள் விசாரித்தபோது அவர் முன்னுக்குபின் முரணாக பதில் அளித்ததால் அவரை சாட்சிகள் திலீபன், வெள்ளத்துரை ஆகியோர் முன்பு கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து பனவடலிச்சத்திரம் காவல்நிலையக்குற்ற எண்.218/2017 வழக்கில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் திருடிய நகையை அவரை அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். மரியஅந்தோணி வீட்டில் திருடிய நகையை விற்று வாங்கிய இருசக்கரவாகனத்தையும், நகையையும் எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். பின்னர் பாத்திமா வீட்டில் திருடிய 4 கிராம் தங்க கம்மலை வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். எதிரிகளையும், வழக்கு சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்தார். இவ்வழக்கின் சொத்தான 4 கிராம் எடையுள்ள கம்மல்களை கைப்பற்றிய அத்தாட்சியை ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்தார். பின்னர் நான் படிவம் 91 மூலம் வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். P.R.NO.285/2017 வழக்கு சொத்துக்கள் நீதிமன்றத்தில் ரிமாண்ட் செய்யப்பட்டன. பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் இருந்த எதிரி அய்யாச்சாமியை 09.10.2017 ம் தேதி 12.30 மணிக்கு சிறைத்துறை அலுவலர் முன்பாக நடைமுறை கைது செய்தேன். 21.10.2017 ம் தேதி 14.30 மணிக்கு 2ம் எதிரி மகாலட்சுமியை தேடிவந்தநிலையில் கீழநீலிதநல்லூர் ஆசி தெருவில் நாங்கள் வாகனத்தணிக்கை செய்துகொண்டிருக்கும்போது அங்கு வந்த எதிரி மகாலட்சுமியை பிடித்துவிசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில்

அளித்ததால் சாட்சிகள் திலீபன், வெள்ளத்துரை ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது பனவடலிச்சத்திரம் காவல்நிலையக்குற்ற எண்.218/2017 வழக்கில் ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரும், அவரது கணவரும் சேர்ந்துதான் இவ்வழக்கு குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவித்ததால் மதுரை பெண்கள் தனிகிளைசிறையில் இருந்தவரை 21.10.2017 ம் தேதி மாலை 5 மணிக்கு சிறைத்துறை அலுவலர் முன்பு நடைமுறை கைது செய்தேன். **எதிரி அய்யாச்சாமியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆகவும், அத்தாட்சி உண்மை நகல் அ.சா.ஆ.8 ஆகவும், படிவம் 91 உண்மை நகல் அ.சா.ஆ.9 ஆகவும், எதிரி மகாலட்சுமியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் விசாரணை மற்றும் எனது விசாரணையின் அடிப்படையில் எதிரிகள் மீது 05.12.2017 ம் தேதி இதச பிரிவுகள் 454, 380 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அத்தாட்சியில் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ள நபர்கள் யார் என்றால் திலீபன் மற்றும் வெள்ளத்துரை ஆகும். மேற்கண்ட திலீபன் இவ்வழக்கின் புகார்தாரரான பாத்திமாவின் கணவரின் உறவினர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எவ்வழக்கின் விசாரணை அதிகாரி என்றால் நான் பனவடலிச்சத்திரம் காவல்நிலையக்குற்ற எண்.219/2017 வழக்கின் விசாரணை அதிகாரி. நான் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.9 படிவம் 91ல் 3 இடங்களில் தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் 2 எதிரிகளையும் நான் இவ்வழக்கிற்காக சம்பிரதாய கைது செய்தேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் இவ்வழக்கிற்கான சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அத்தாட்சி பிறப்பிக்கப்படவில்லை

என்றாலும், இவ்வழக்கின் சொத்தை நான் படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**